ஹைக்கூ திண்ணை

ஜூன் - ஜூலை 2021

6

தொகுப்பாளர் :
ராஜூ ஆரோக்கியசாமி

ஹைக்கூ திண்ணை

மின்னிதழ் 6

ஜூலை 2021

ஆசிரியர் :

கா.ந.கல்யாணசுந்தரம்

ஆசிரியர் குழு :

அனுராஜ்
முனைவர் வே.புகழேந்தி
ரசிகுணா
சாரதா க.சந்தோஷ்
அன்புச்செல்வி சுப்புராஜு
இளவல் ஹரிஹரன்



ஆலோசகர்கள் :

தமிழ்நெஞ்சம் அமின்
குமரன் அம்பிகா
யுகபுத்திரன்
முனைவர் ம.ரமேஷ்



**இவ்விதழில்
ஹைக்கூ, லிமரைக்கூ, ஹைபுன், சென்ரியு
வகைமைகள் இடம்பெற்றுள்ளன.**

தமிழ்நெஞ்சம்

&

உலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம்

இணைந்து வழங்கும் "ஹைக்கூ திண்ணை"

ஆசிரியரின்

திண்ணைப்பேச்சு

அன்பு நெஞ்சங்களுக்கு,

ஹைக்கூ திண்ணை மின்னிதழ், பிரான்சு தமிழ்நெஞ்சம் அமின் அவர்களின் பேராதரவோடு வெற்றிநடை போட்டுக்கொண்டிருக்கிறது. நூற்றுக்கும் மேற்பட்ட கவிஞர்களின் ஹைக்கூ / சென்ரியு / லிமரைக்கூ / ஹைபுன் வகைமைகளைத் தொடர்ந்து உலகத்தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றத்தில் பதிவிட்டு வருகிறார்கள். கவிஞர்களின் ஹைக்கூ திறன் பல்வேறு கோணங்களில் மேலோங்கி நிற்கிறது.

இந்த இதழின் தொகுப்பாளராக கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி பணியாற்றி இதழுக்கு பெருமை சேர்த்துள்ளார். தொடர்ந்து வரும் மின்னிதழ்களை முன்னின்று தொகுத்து வழங்க கவிஞர்கள் சாரதா சந்தோஷ், அன்புச்செல்வி சுப்புராஜு, அனுராஜ் ஆகியோர் தயாராக உள்ளனர். கவிஞர்கள் தங்களது மேலான படைப்புகளை தொடர்ந்து பதிவிடுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

பெருந்தொற்றுக் காலத்தில், உறவுகளையும் நண்பர்களையும் இழந்துள்ளோம். அவர்களது ஆன்மா சாந்திபெற இறைவனை வழிபடுவோம். இனிவரும் காலம் மானுடம் நலமுற வாழும் சூழலை ஏற்படுத்தும் வசந்தமாக இருக்கட்டும் என எதிர்நோக்குவோம்.

மிகுந்த பேரன்புடன்,

கா. ந. கல்யாணசுந்தரம்
ஆசிரியர் மற்றும் குழுவினர்.

ஜென் பௌத்தத்தை பிரதிபலிக்கும் 12 ஹைக்கூ

மொழிபெயர்ப்பு கட்டுரை

தமிழில் : கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி

ஆங்கிலத்தில்: ஜோன் அசானோ (John Asano)

ஹைக்கூ (ஜப்பானிய சிறுகவிதைகள்) எழுதும் பாரம்பரிய கலை முதலில் ஜப்பானில் பௌத்த பிக்குகளிடமிருந்து தொடங்கி இப்போது உலகம் முழுவதும் பரவியுள்ளது. இந்த ஆன்மீக கலை வடிவம் அந்த நேரத்தில் இருப்பதை வலியுறுத்துகிறது, கவிதையின் குறுகிய தன்மை (மூன்று வரிகள்) ஜென் பௌத்த தத்துவத்தின் பிரதிபலிப்பாகும். ஜென் பௌத்த தத்துவத்தின் முக்கிய கூறுகளை பிரதிபலிக்கும் 12 ஜப்பானிய ஹைக்கூக்கள் ,இங்கே காண்போம்,

1.பழைய குளம்

ஜப்பானில் நன்கு அறியப்பட்ட பாஷோவின் ஹைக்கூ "பழைய குளம்",

"பழைய குளம்
ஒரு தவளை உள்ளே குதிக்க -
நீரின் ஒலி "

எடோ காலத்தைச் சேர்ந்த ஜப்பானிய கவிஞரான மாட்சுவோ பாஷோ (1644-1694) ஜென் பௌத்த மதத்தின் ஆன்மீகத்தை தனது ஹைக்கூவுடன் சரியாக பிரதிபலிக்கிறார். குளத்தின் அமைதியானது இயற்கையுடனான மௌனத்தையும் ஒற்றுமையையும் குறிக்கிறது, தவளை குதித்து மௌனத்தை உடைப்பது மற்றும் நீரின் சத்தம் ஒரு நிகழ்வைக் குறிக்கிறது, அறிவொளியின் ஒரு கணம்.

2. முதல் குளிர் மழை
பாஷோவிடமிருந்து மற்றொரு பிரபலமான ஹைக்கூ,

"முதல் குளிர் மழை
குரங்கு கூட விரும்புவதாகத் தெரிகிறது
போர்வையாய் ஒரு சிறிய வைக்கோல் "

இந்த ஹைக்கூ பருவங்களை பிரதிபலிக்கும் தனிப்பட்ட அனுபவங்களில் ஒன்றாகும். குளிர்காலத்தின் முதல் குளிர் மழை எப்போதும் நாம் உலகத்தைப் பகிர்ந்து கொள்ளும் விலங்குகளுக்கு கூட கடினமானது.

3. இலை இல்லாத கிளையில்
மற்றொரு பிரபலமான பாஷோ ஹைக்கூ,

"இலை இல்லாத கிளையில்
ஒரு காகம் ஓய்வெடுக்க வருகிறது -
இலையுதிர் இரவு "

பாரம்பரிய ஹைக்கூ இயற்கையைப் பற்றி மட்டுமே எழுதப்பட்டது. பிரச்சினைகளைப் பற்றி கவலைப் படுவதையோ அல்லது நாளை பற்றி சிந்தித்தலிலோ மட்டும் கவனமாய் இருந்தால், இப்போது நடக்கும் விஷயங்களை கவனிக்கக்கூட நாம் நேரம் கிடைக்காது என்ற எண்ணத்தை இது வெளிப்படுத்துகிறது.

4. நான் எழுதுகிறேன், அழிக்கிறேன், மீண்டும் எழுதுகிறேன் ஹொகுஷி மற்றொரு பிரபலமான எடோ பீரியட் (1603-1868) ஜப்பானிய ஹைக்கூ கவிஞர்.

நான் எழுதுகிறேன், அழிக்கிறேன், மீண்டும்
எழுதுகிறேன்,/
மீண்டும் அழிக்க, பின்னர்/
மலர்கிறது ஒரு பாப்பி பூ //

நாம் அனைவரும் மனிதர்கள், தவறு செய்கிறோம் என்பதை இந்த ஹைக்கூ காட்டுகிறது. நம்முடைய பொதுவான மனித நேயத்தை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் - எல்லை மீறும் பாதையின் படிகளில் ஒன்று. இது வசந்தத்தையும் நாம் வாழும் உலகின் பலவீனத்தையும் பிரதிபலிக்கிறது

5. நேற்றின் பனி

ஜென் துறவிகளிடையே ஒரு பாரம்பரியம் என்ன வென்றால், அவர்கள் இந்த வாழ்க்கையிலிருந்து பிரிந்து செல்லும்போது கடைசி ஹைக்கூவை எழுதுவது. கோசனின் இந்த ஹைக்கூ 1789 இல் தனது 71 வயதில் எழுதப்பட்டது.

“நேற்றின் பனி
செர்ரி மலர்களைப் போல வீழ்ந்தது
அது உண்மையில் தண்ணீரே ”

இது ஜென் பௌத்தத்தில் பிரபலமான நம்பிக்கையான வாழ்க்கை வட்டத்தைக் காட்டுகிறது. இது நிலையாமையின் உருவகப் பொருளையும், ஒரு வாரம் நீடிக்கும் செர்ரி மலர்களுடனும் மேலும் நிலத்தைத் தொட்டவுடன் பனி உருகுதலையும் குறித்தானது.

6. இது ஒரு கனவைத் தவிர வேறு என்ன?
ஹக்குயெனின் இந்த புகழ்பெற்ற ஹைக்கூ வசந்த காலத்தில் செர்ரி மலர்களையும் அவரது வாழ்க்கையை யும் பிரதிபலிக்கிறது.

இது ஒரு கன வைத் தவிர வேறு என்ன?
ஏழு சுழற்சிகள் மட்டுமே நீடிக்கிறது
பூத்தலைப்போல்

இந்த ஹைக்கூ செர்ரி மலரின் ஏழு நாள் வாழ்க்கையை (ஏழு சுழற்சிகள்) குறிக்கிறது, இது அவரது வாழ்க்கையின் ஏழு தசாப்தங்களையும் பிரதிபலிக்கிறது, ஏனெனில் அவர் 1806 இல் தனது அறுபத்தாறு வயதில் இறந்தார்.

7. நான் கியோட்டோவில் இருந்தாலும்
இசாவின் பிரபலமான ஹைக்கூ,

“கியோட்டோவில் இருந்தாலும்கூட,
குயிலின் அழுகையைக் கேட்டு,
கியோட்டோவுக்காக நான் ஏங்குகிறேன் ”

இந்த ஹைக்கூவுக்கு ஒரு சமகால உணர்வு உள்ளது, ஆனால் வாழ்க்கையின் தன்மை பற்றி மிகவும் அவசியமான உண்மையை விவரிக்கிறது. இது நினை மற்றும் பழக்கமான இடத்தின் ஏக்கம் ஆகியவற்றைப் பற்றியது. நாம் விரும்பும் இடத்திலிருந்து நாம் விலகி இருக்கும்போது அல்லது அந்த இடம் அதிகமாக மாறியிருந்தால், இணைப்பு உணர்வு துன்பத்தையும் வேதனையையும் ஏற்படுத்தும்

8. மூலைகளிலும் முடுக்குகளிலும் ஜப்பானிய கவிஞரும் ஓவியருமான பூசன் (1716 - 1784) எடோ காலத்தின் (1603-1868) மிகச் சிறந்த கவிஞர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார்.

“ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும்
குளிர் எச்சங்கள்:
பிளம் மலரும் ”

இந்த ஹைக்கூ மாற்றத்தின் ஒரு காலத்தை பிரதிபலிக்கிறது, குளிர்காலத்தின் குளிர் குறைந்து வருகிறது, பிளம் பூக்கள் பூக்கத் தொடங்கும் போது. வசந்த காலம் விரைவில் நம்மீது வந்தாலும், குளிர்காலத்தின் குளிர் இன்னும் சிறிய நிழலான இடங்களிலும், மூலைகளிலும், ஓட்டைகளிலும் நீடிக்கிறது.

9. இந்த சாலைவழியாக பாஷோவிலிருந்து மற்றொரு பிரபலமான ஹைக்கூ,

“இந்த சாலை வழியாக
யாரும் போவதில்லை,
இலையுதிர் கால மாலை ”

இந்த ஹைக்கூ பல முக்கிய கூறுகளை பிரதிபலிக்கிறது, அதில் மிக முக்கியமானது தனிமையின் உணர்வு. வாழ்க்கையின் வழியாக இந்த பாதையில் நாம் அனைவரும் தனியாக இருக்கிறோம், இது இறுதியில் மரணத்திற்கு வழிவகுக்கிறது (இலையுதிர் காலம்).

10. பனித்துளியின் உலகம்

ஜப்பானிய கவிஞரும் புத்த பாதிரியாருமான இசா (1763 - 1828) ஜப்பானில் உள்ள "தி கிரேட் ஃபோர்" ஹைக்கூ கவிஞர்களில் ஒருவராக கருதப்படுகிறார்.

> "பனித்துளியின் உலகம்,
> ஒவ்வொரு பனிக்கட்டிக்குள்ளும்
> உலகப் போராட்டங்கள் "

இந்த ஹைக்கூ இசாவின் தனிப்பட்ட போராட்டத்தை வேதனையுடன் பிரதிபலிக்கிறது, அவர் தனக்குப் பிறந்த முதல் குழந்தையை இழந்த பின்னர் அதை எழுதினார், அதே போல் இரண்டரை ஆண்டுகளுக்கு பின்னர் தனது மகள் இறந்ததும் எழுதினார்.

11. நான் ஒரு சீமைப் பனிச்சை பழத்தைக் கடித்தேன்
ஜப்பானிய கவிஞரும், மீஜி காலகட்டத்தில் (1868-1912) எழுத்தாளருமான ஷிகி (1867-1902) நவீன ஹைக்கூ கவிதைகளின் வளர்ச்சியில் ஒரு முக்கிய நபராகக் கருதப்படுகிறார்.

“நான் ஒரு சீமைப் பனிச்சை பழத்தைக் கடித்தேன்
மணிகள் மெதுவாக ஒலிக்கின்றன
ஹோரியு-ஜி கோயில் ”

இந்த ஹைக்கூ டோக்கியோவுக்கு செல்லும் வழியில் நாராவால் நிறுத்தப்பட்ட பின்னர் எழுதப்பட்டது. இது அவரது மிகவும் பிரபலமான ஹைக்கூ மற்றும் இலையுதிர் காலத்தின் பிற்பகுதியில் அமைதியான மற்றும் அமைதியான காட்சியின் தோற்றத்தை அளிக்கிறது, அங்கு ஷிகி ஹோரியு-ஜி கோவிலில் தோட்டத்தில் ஓய்வெடுக்கிறார்.

12. பறந்துவிட்ட காகம்

ஜப்பானிய நாவலாசிரியரும் ஹைக்கூ கவிஞருமான நாட்சுமே சோசெக்கி (1867 - 1916), கோகோரோ, போட்சன் மற்றும் ஐ ஆம் எ கேட் ஆகிய நாவல்களுக்கு மிகவும் பிரபலமானவர்.

“பறந்துவிட்ட காகம்
மாலைச் சூரியனில் அசைந்தாடுகிறது
இலை இல்லாத மரம் ”

ஜப்பானின் மிகவும் பிரபலமான எழுத்தாளர்களில் ஒருவரான இவரது இந்த எளிய மற்றும் நேர்த்தியான ஹைக்கூ பௌத்த போதனைகளில் பொதுவான கருப்பொரு ளான பருவங்களின் மாற்றத்தை பிரதிபலிக்கிறது

- படிக்கும் போதெல்லாம்
  மனம் சஞ்சலமடைகிறது
  பிரிந்தவளின் காதல் கடிதம்

- பட்டாம்பூச்சியின் அழகை
  தூரமிருந்து படம் பிடிக்கிறது
  வைகறைப் பனித்துளி

- ஓரவிழிப் பார்வை
  பலநூறு கதை சொல்லும்
  பூத்த காதல்

- வலையில் சிக்கியும்
  மனம் மகிழ்ச்சி கொள்கிறது
  இணையத் தொடர்பு

- தொலைதூர தேடல்
  முடிவே இல்லாமல் தொடரும்
  நீண்ட சாலை

- திடீர் மழை
  அருவியாய் கொட்டுகிறதே
  மனதில் கவிவரிகள்

- தமிழ்நெஞ்சம் அமின்

கற்பூரமாய்க் கரைந்து கற்கோபுரமாய் எழுந்தவன் – ஹைக்கூ கவிஞன் கி.சார்லஸ்!

கவித்திலகம் வெற்றிப்பேரொளி

ஹைக்கூ கவிஞன் கி.சார்லஸ் - இந்தப் பெயரை நினைக்கும்போதே நெஞ்சுக்குள் பூக்கின்றன ஈரரோஜாக்கள். அவற்றின் மெல்லிதழ்களின் மேல் மின்னுகின்றன பனித்துளி களுக்குப் பதில் என் கண்ணீர்த் துளிகள். இளம் வயதிலேயே கற்பூரம் போல் காற்றில் கரைந்து விட்டாலும் கற்கோபுரம் போல் என் நினைவில் எழுகிறார் ஹைக்கூ கவிஞன் கி.சார்லஸ்.

கொஞ்சம் கூட எதிர்பாராத விதத்தில் நான் திருக்குவளைவாசியானேன். என் காதல் இணையர் ஊர் அது. காதல் இணையருடன் நிறைய கவிதை இணையர்களையும் எனக்குத் தந்த ஊர் திருக்குவளை. திருக்குவளை முத்தமிழ் மன்றம் திருக்குவளை யின் தமிழ் முகவரி. அந்த மன்றத்தின் செயலராக இருந்த போதே ''கவிதைவெளி'' என்ற ஓர் இலக்கிய அமைப்பினை நிறுவி நடத்தினேன் நான். ஒவ்வொரு முழுநிலா நாளிலும் கவிதைவெளியின் இலக்கியச் சந்திப்பு

என் வீட்டின் மொட்டை மாடியில் நிகழும். உள்ளூர் நண்பர்கள் யார் வருகிறார்களோ இல்லையோ, திருக்குவளையிலிருந்து 12 க.மீ.. தொலைவிலிருந்து ஹைக்கூ கவிஞன் கி.சார்லஸ் தவறாமல் வந்து அக்கூட்டத்தில் கலந்து கொள்வார்.

திருத்துறைப்பூண்டி - நாகப்பட்டினம் சாலையில், திருப்பூண்டி என்ற ஊர் உள்ளது. அவ்வூரிலிருநது உள்ளடங்கி 2 கி.மீ. தூரத்தில் உள்ள சிற்றூர் காரப்பிடாகை. ஒரேயொரு பேருந்து மட்டுமே வந்து போகும் உள்கிராமம் அது. அங்கிருந்து மிதிவண்டியில் திருப்பூண்டிக்கு வருவார். மிதிவண்டியை அங்கே விட்டுவிட்டு நாகப்பட்டினத்திலிருந்து எட்டுக்குடி செல்லும் 13 ஆம் நகரப் பேருந்தில் திருக்குவளைக்கு வருவார். கவிதைவெளி இலக்கியச் சந்திப்பில் ஆர்வமுடன் பங்கேற்று விட்டு இரவு 9.30 மணிக்கு மேல் மீண்டும் 13 ஆம் வழித்தட நகரப் பேருந்தில் திருப்பூண்டி சென்று, அங்கிருந்து மிதிவண்டியில் தன் ஊர் காரப்பிடாகைக்குச் செல்லவேண்டும். 13 ஆம் எண் நகரப் பேருந்து என் வீட்டு வழியாகத்தான் எட்டுக்குடி சென்று திரும்பும். அவர் அந்த வண்டியில் புறப்பட ஏதுவாக அவருக்கான இரவு உணவை முன்னதாக வழங்கி விடுவார் என் வாழ்விணையர். கவிதைவெளி இலக்கியச் சந்திப்பு நிகழ்வில் பங்கேற்பவர்கள் அனைவருக்கும் என் இல்லத்தில் தான் இரவுணவு.

சிலசமயங்களில் காரப்பிடாகையிலிருந்து மிதிவண்டி யிலேயே என் வீட்டிற்கு வந்து விடுவார் சார்லஸ். என்ன கொடுமை என்றால் சார்லஸ் சிவப்பாக, ஒல்லியாக, நல்ல உயரமாக இருப்பார். ஆனால் அவர் வைத்திருக்கும் மிதிவண்டி உயரம் குறைவானது. ஓட்டும் போது முட்டி இடிக்கும். அந்த வண்டியில் தான் இலக்கியம் செய்ய 12 கி.மீ. தூரம் பயணித்து வருவார். நிகழ்வை முடித்துக்கொண்டு நண்பர்கள் புறப்பட இரவு 10 மணிக்கு மேலாகிவிடும். ஆகவே அவரை முன்னதாகப் புறப்படச் சொன்னால் போகமாட்டார். எல்லோரும் சென்ற பிறகு கடைசியாகத்தான் புறப்படுவார்.

இப்படி இரவு பத்து மணிக்குப் பிறகு தன்னந்தனியாக 12 கி.மீ தூரம் மிதிவண்டியில் பயணிக்க வேண்டும். முழுநிலா நாளாக இருந்தாலும் இரவில் தனியாக செல்ல வேண்டாம் ; தங்கிக் காலையில் செல்லலாம் என்றாலும் கேட்கமாட்டார். சமயத்தில் வழியில் நாய்கள் துரத்தும் . அதுதான் கொஞ்சம் தொல்லை ஐயா என்று சிரித்தபடிச் சொல்லி விட்டுப் புறப்பட்டு விடுவார்.

இப்படியெல்லாம் இலக்கியத்துக்காக தன்னை இஷ்டப் பட்டுபக் கஷ்டப்படுத்திக் கொண்டவர் தம்பி ஹைக்கூ கவிஞன் கி.சார்லஸ். அவர் என்மீது அளப்பரிய அன்பும் மரியாதையும் கொண்டிருந்தார். திருமணத்திற்குப் பிறகு மனைவியுடன் என் திருக்குவளை வீட்டிற்கு வந்தார். பின் குழந்தை பிறகும் மீண்டும் ஒருமுறை மூவராக வந்தனர். நான் என் வீட்டிற்கு "கவிதை" என்று பெயர் வைத்திருந்தேன். சார்லஸ் தன் காரப்பிடாகை இல்லத்திற்கு "ஹைக்கூ குடில்" என்று பெயர் சூட்டியிருந்தார். உங்கள் கவிதை இல்லம் பெயரைப் பார்த்துத்தான் நான் என் வீட்டிற்கு இப்படிப் பெயரை வைத்தேன் ஐயா என்றார்.

ஹைக்கூ கவிஞன் கி.சார்லசுக்கு திக்குவாய். ஆனாலும் கவியரங்க நிகழ்வுகளில் நான் அவர் பெயரைச் சேர்த்துவிடுவேன்.அப்பொழுதெல்லாம் «கவிஞர்வித்தியாசன்» என்ற புனைபெயரில் அவர் கவிதைகள் எழுதிக்கொண்டு இருந்தார். .... அவரும் தலைப்பு எதுவானாலும் ஹைக்கூ கவிதைகளுடன் வந்து விடுவார். அவர் பெயரை அழைக்கும் போது, அவருடன் நானும் மேடைக்குச் சென்று அவருடைய கவிதையை நான் ஒலிவாங்கியில் படிப்பேன். அவர் கையைக் கட்டிக்கொண்டு என் பக்கத்தில் நிற்பார். வேறு யாரையும் படிக்க விடமாட்டார். நான் தான் படிக்க வேண்டும். ஏற்ற இறக்கங்களுடன் அவர் கவிதையை நான் படிப்பதை மிகவும் விரும்பி இரசித்துக் கேட்பார்.

பேசும்போதும், படிக்கும் போதும் தான் திக்குமே

தவிர, சார்லஸ் எஸ்.பி.பாலசுப்பிரமணியன் குரலில் பாடத் தொடங்கினால் அவ்வளவு இனிமையாகப் பாடுவார்.

அவரோடு பேருந்துகளில் பல ஊர்களுக்குக் கவியரங் கம், இலக்கிய நிகழ்வுகளுக்காகப் பயணித்துள்ளேன். அப்போ தெல்லாம் என் அருகில் தான் உட்கார்ந்து கொள்வார். நிறைய ஹைக்கூ கவிதைகளைப் புதிது புதிதாக எழுதிக் காட்டுவார். அவற்றை உடனுக்குடன் முகநூலில் பதிவேற்றுவார். நான் 'ஆ' வென்று வாய்பிளந்து கொண்டு பார்ப்பேன். அவர் அப்போதே முகநூலில் தீவிரமாக இயங்கிக் கொண்டிருந்தார். நானோ அதில் ஆர்வமே இல்லாமல் இருந்தேன். நீங்கள் முகநூல் கணக்குத் தொடங்கி , கவிதைகள் பதிவிடுங்கள் ஐயா என்று என்னை வற்புறுத்திக் கொண்டே இருந்தார். ஏனோ அப்போது முகநூலில் விருப்பம் இல்லாமல் இருந்தேன்.

ஒருநாள் கவிஞர் நாகை ஜவகர் தொலைபேசியில் அழைத்து, நம் நண்பர் சார்லஸ் தஞ்சாவூர் ரைட் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார் என்ற சேதியைச் சொன்னார். அப்போது நான் தஞ்சையில் இருந்தேன். உடனே மருத்துவ மனைக்குப் போய் "ஐசியூ"வில் நினைவின்றி இருந்த சார்லசைப் பார்த்தேன். இடிந்து போயிருந்த அவருடைய துணைவியாருக்கும், அம்மாவுக்கும் ஆறுதல் சொல்லி விட்டுத் திரும்பினேன். மறுநாள் அவர் மறைந்து விட்ட செய்தியையும் ஜவகர் தான் தெரிவித்தார். உடன் மருத்துவமனைக்கு ஓடினேன். உடலை சொந்த ஊருக்கு ஆம்புலன்சில் கொண்டு சென்று விட்டார்கள் என்ற தகவல் கிடைத்தது. அங்கிருந்து பேருந்தில் அலைமோதும் நினைவுகளுடன் திருப்பூண்டி சென்றேன். கவிஞர் நாகை ஜவகர் மற்றும் இலக்கிய நண்பர்களுடன் அங்கிருந்து காரப்பிடாகைக்குச் சென்றேன்.

சின்னஞ்சிறிய தன் "ஹைக்கூ குடிலில்" ஆயிரமாயிரம் ஹைக்கூ கவிதைகளை, கனவுகளைத் தன்னுள் புதைத்துக் கொண்டு கண்மூடி நிரந்தரமாக உறங்கிக் கொண்டிருந்தார்

ஹைக்கூ கவிஞன் கி.சார்லஸ்.

அந்தப் பொன்னுடலுக்குப் பூமாலை அஞ்சலி செலுத்திவிட்டு, வெளியே வந்தால்... நடந்திருக்கும் துயரை அறியாமல் விளையாடிக் கொண்டிருந்தன... ஹைக்கூ கவிஞன் கி.சார்லசின் இரண்டு «உயிர் ஹைக்கூ கவிதைகள்»!

காலத்தை வெல்லும் ஹைக்கூ கவிஞன் கி.சார்லசின் ஹைக்கூ கவிதைகள் சில... இங்கே...,

*

இறந்த பல்லி
ஊர்ந்து செல்கிறது
எறும்புகளின் கால்களில்.

*

வாழ்வதை விட
இறந்து போகலாம்
ஏமாற்றும் உலகம்.

*

யாரோஒருத்தி கடந்து போகிறாள்
எவ்ளோ ஒருத்தியை
நினைவூட்டியபடி.

*

தொலைந்த கவிதை
கண்டுபிடித்துத் தந்தது
பெய்த மழை.

*

வெயிலைப் போலவே
எரிந்து விழுகிறான்
விற்பனையாகாத கடைக்காரன்.

*

வியக்க வைக்கும் சிலைகள்
சுமந்து நிற்கின்றன
உளிகளின் வலிகளை.

*

குழந்தைக்குப் பிறந்தநாள்
கொஞ்சம் வருத்தம்தான்
குறையும் மழலைப் பேச்சு.

*

பரணில் புல்லாங்குழல்
வாசிக்க எடுத்தேன்
குளவிக் கூடு.

*

பழைய கிண்ணம் தான்
நீர் நிரப்பி வைத்தேன்
தாகம் தீர்க்கும் குருவிகள்.

*

மூடிய கதவுகள்
வாசலில் வரவேற்கும்
உதிர்ந்து கிடக்கும் பூ.

- ஹைக்கூ கவிஞன் கி.சார்லஸ்

- முதியவரின்
திருவோட்டில் விழுகிறது
கோபுர நிழல்.

- இறகைத் தூரிகை ஆக்கினேன்
அது தன் பறவையை
வரைகிறது

- நெருப்பில் தலை குளித்துக்
காற்றில் புகைக் கூந்தலை
உலர்த்துகிறது ஊதுபத்தி .

- அணைவதற்கு முன் நொடிவரை
புன்னகைக்கத் தவறுவதில்லை
விளக்கு.

- மூங்கில்களே உதடுகளுடன்
மட்டுமே உறவாடுங்கள்.
தோள்களைத் தேடாதீர்.

- துயரத்தை எளிதாய்க்
கடக்கச் செய்கிறது;
மற்றொரு துயரம்.

- ஆரூர் தமிழ்நாடன்

- பூகம்ப நகரம்
ஒற்றை நாய் ஓலத்துடன் த்துபோகும்
குயில் கூவல்

- இடம் மாறி அமர்ந்துள்ளன
மணியோசைக் கலைத்த
கோயில் புறாக்கள்.

- வலையில் சிக்கியது
கொக்கு காலை மாற்றுகையில்
தப்பிய மீன்.

- உடனே கிட்டியது
கண்ணாடி பேழைக்குள் சிக்கிய வண்டுக்கு
பூதவுடலின் தரிசனம்

- பின்னிரவு மழை
குழிநீர்களை கோடிட்டு காட்டி
நனையும் முன் மறையும் மின்னல்

- முனைவர் வே. புகழேந்தி

- ஆயிரம் சொற்களை
  வென்றுவிடுகிறது
  ஒருகோப்பைத் தேநீர்

- தக்கதுதான் காக்கை
  அதன் எச்சத்தில்
  இளஞ் செடி

- நடக்கையில்
  அவன் கால்களில் தெரிகிறார்
  அப்பா

- தன்னிடத்தில்
  இத்தனை சருகுகளா
  தலைகவிழ்ந்து நிற்கும் மரம்

- மலையில் மோதிய மேகம்
  தலைகுப்புற விழுகிறது
  அருவியாய்

- சமையலுக்கு நேரமாகிறது
  இன்னும் கிடைக்கவில்லை
  தூண்டிலில் மீன்

- இருக்க இடம் தந்தமைக்கு
  இதுதானா பரிசு
  கிளைகளில் பறவை எச்சம்

- அமுதபாரதி

- மனித நிழல்களின்
நீள அகலத்தைத் தீர்மானிக்கிறது
இயற்கை வெளிச்சம்

- மழைக்காலத் தொடக்கம்
பறந்து அறிவிப்பு செய்கிறது
தட்டான் பூச்சிக் கூட்டம்

- மார்கழிப் பனித்தூறல்
காலை வாசல் நனைக்கிறது
சாணம் தெளித்த தண்ணீர்

- பூங்காவில் ஏகாந்தம்
எல்லோருக்குமாகக் காத்து இருக்கிறது
மரத்தடியில் இருக்கை

- விளையாத நிலம்
பிரிய மனமின்றிக் கிடக்கிறது
விவசாயி மனம்

- கவிநிலா மோகன்

தமிழ் ஹைக்கூ என்பது யாதெனில்...

- மூன்று அடிகளில் எழுதப்பட வேண்டும்.
- 5_7_5 அசை அமைப்பில் இருந்தால் சிறப்பு.. இல்லையென்றாலும் பரவாயில்லை.
- முதல் ..மற்றும் கடைசி அடியை விட நடுவரி சற்று நீளமாய் அமைக்கலாம்..இல்லாவிட்டாலும் பரவாயில்லை.
- முதலிரண்டு அடி ஒரு கூறாகவும்..கடைசி அடி ஆற்றல் மிக்க பெயர்சொல்லுடன் ஈற்றடி திருப்பமாய் அமைவதோ அல்லது முரணாய் அமைப்பதோ அழகு சேர்க்கும்.
- மூன்றாவது அடியினைமுதலிரண்டு அடிகளுக்கு பொருந்துவதாய் அமைப்பதே நல்லது.முரண் என்பதற்காக முரணான வார்த்தைகளை கொண்டு ஈற்றடி அமைப்பது ஹைக்கூவின் அழகை கெடுத்து விடும்.. என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.
- தன்மை பாங்கினை ஹைக்கூ ஏற்காது
- உணர்ச்சிகளை நேரடியாக வெளிப்படுத்த கூடாது
- கற்பனை..உவமை..உருவகம் இவைகளையும் ஹைக்கூ ஏற்பதில்லை.
- சின்ன உயிர்களையும் சிறப்பித்துப் பாடவும்.. இயற்கையை நேசித்தும் ஹைக்கூ படைத்தல் சிறப்பு.

- கண்ணில் காணும் காட்சியை புகைப்படப் பதிவு போல (Photo Shot) பதிவிடுதலே சிறப்பு.. மிகையான வார்த்தை பிரயோகங்கள் தேவையில்லை.
- ஹைக்கூ தந்தி மொழி போல் வார்த்தைச் சிக்கனத்துடன் இருக்க வேண்டும்.
- ஹைக்கூ ஒன்றுக்கு மேற்பட்ட பொருளுடன் படைத்தல் (வாசிக்கப்படும் போது உணர்தல்) சிறப்பு.
- பெரும் பாலும் நிகழ்கால நிகழ்வுகளையே ஹைக்கூவில் பயன்படுத்தல் வேண்டும்.(ஒரு சில விதிவிலக்கும் உண்டு).
- சிந்தித்து படைக்க சிறப்பான ஹைக்கூ உதிக்கும்.

- அடர்ந்த கானகத்தை
  ஊடறுத்துச் செல்கிறது.
  இருப்புப் பாதை.

- காற்றிலாடும் மரக்கிளை
  கவனத்தை ஈர்த்திடும்
  சிவப்பு நிறப்பறவை..!

இனிய வாழ்த்துகளுடன்

அனுராஜ்

● ஓய்வுபெற்ற பள்ளி ஆசிரியர்
ஏணிகள் செய்யும்,
தொழில் தொடங்கினார்.

● ஊரடங்கால் விற்காத பழங்கள்
வயிறார உண்டனர்,
பழ வியாபாரியின் பிள்ளைகள்.

- ஆ.சார்லஸ்.

● குளங்களை வெட்டி
காத்திருக்கிறது
வனங்களை அழித்த கூட்டம்.

. கேசவன் புருஷோத்தமன்

● இளமையின் கனவினை
இளையவர் காண்கின்றனர்
நூலறுந்த பட்டம்.

- நயினைமைந்தன்

● ஏழைக் கணவன் தந்ததில்/
சொர்க்கத்தைக் கண்டாள்/
ஒரு முழமல்லிகைப் பூ.

● கலப்பட வியாபாரி
ஏற்க மறுக்கிறார்.
மகனின் கலப்புமணத்தை.

● மலர்ந்த முகத்துடன்
எப்போதும் வரவேற்கிறார்.
அடகுக் கடைகாரரர்.

- சிவானந்தம்

● பயிர்களின் நடுவில்
மறக்கடிக்கப் படுகிறது
புற்களின் அழகு.

● இன்னும் அந்த நெடி
என் மூக்கில்...
அப்பா உதறிய பொடி.

- செஞ்சோலை.

- மீன் கொத்தி
அமர்ந்த கிளையில் இல்லை
இலைகள்...!

- சருகுகளை அள்ளி எறியும்
மகளிடம் இருந்து பறக்கும்
எல்லாமே பட்டாம்பூச்சிகள்...!

- மலைத் தொடர்களே
இனி ஓய்வெடுங்கள்
நாளை விடியட்டும்...!

- ஆர் ஜவஹர் பிரேம்குமார்

● அம்மாவின் சேலையில்
படுத்து உறங்கினேன்
நிம்மதியான தூக்கம்...

● மின் கம்பியில்
அமர்ந்த பறவை
என்னை திசைதிருப்பியது...

● வெறிச்சோடி கிடக்கிறது
சிறுவர் பூங்கா
மலரும் நினைவுகள்

- சா.கணேஷ் குமார்

● தாமரையில் தண்ணீர்
மிதந்து கொண்டிருக்கிறது
நிலவின் பிம்பம்..!

● கிராமத்துச் சாலை
வெறிச்சோடிக் கிடக்கிறது
ஆலமரப் பஞ்சாயத்து..!

- ஜெயச்சந்திரன்.ப

கார்மேக பிளவில்
கசியும் ஒளிக்கீற்றில் மிளிர்கிறது
பனிபடர்ந்த மலைமுகடு

காயங்கள் இல்லை
இருந்தும் வேதனை தருகிறது
கண்ட கனவு

நிசப்தமான குளத்தில்
அவ்வப்போது நழுவி விழுகின்றன
சொட்டும் பனித்துளிகள்

அம்மா மறைந்தும்
தினந்தோறும் வந்து போகிறது
சோறூட்டிய அதேநிலவு



- கவியாசகன்

●
தாத்தாவின் குடும்ப போட்டோ
கறுப்பு வெள்ளையில்
வளர்ப்பு காளை.

- பா.சிவா

•

புல்லாங்குழல்கள் இருக்கின்றன
இசைக்க நாதியில்லை
காப்பகத்தில் கடவுள்கள்

•

இலை உதிர்ந்ததும்
இருப்பிடம் தேடி தெறித்தோடும்
குடிகொண்ட கட்டெறும்பு

•

சட்டைப்பையில் பேனா
பரணில் ஒட்டடையுடன் அப்பாவின்
முனை மழுங்கிய மண்வெட்டி

•

சாலையோரம்
வேப்பங்கன்றைப் பிடுங்குகிறேன்
வேரோடு வரும் இறகு

•

இலையுதிர்காலம்
மாமரத்தில் கலையாமல் இருக்கும்
ஒரு தேன்கூடு



- ஹைக்கூ உமா

இல்லை ஆனால் உண்டு

- அருணாச்சல சிவா , சென்னை

ஒரு ஜென் ஞானி தனக்கு சீடர்களையே வைத்துக் கொள்வதில்லை.

தொடர்ந்து ஒரு இளைஞன் அவரை கேட்டுக் கொண்டே இருந்ததால் அன்று வரச்சொல்லி இருந்தார்.

இளைஞன் அவர் குறிப்பிட்ட நேரத்தில் வந்தான். அமைதியாக ஜென் ஞானியை வணங்கி அவர் முன் அமர்ந்தான்.

"இன்று ஒரு நாள் பயிற்சி செய்யுங்கள். இதில் முன்னேற்றம் இருந்தால் தொடர்ந்து நீங்கள் வரலாம்", என்று சொல்லிவிட்டு ஜென் ஞானி அந்த இளைஞருக்கு பயிற்சியை ஆரம்பித்தார்.

ஞானியின் வழிகாட்டுதலின்படி தியானம் செய்ய ஆரம்பித்தான்.

இளைஞன் தியானத்தில் இலயித்து ஆழ்ந்து முடிக்கும் நேரம் குரு வந்தார்.

இளைஞனிடம் கேட்டார், “உங்கள் பெயர் என்ன?”

இளைஞன் பதில் சொன்னான், “பெயர் இல்லை”

“ஊர் என்ன?”

“ஊர் இல்லை”

“நாடு எது?”

“நாடு இல்லை”

“நீ யார்?”

“நான் யாரும் இல்லை”

ஞானிக்கு இளைஞன் சொன்ன பதில் ஓரளவுக்கு தான் திருப்தி. இளைஞனை உணவு உண்ண அழைத்தார்.

இளைஞன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது குரு மறுபடி கேட்டார்,

“உனக்கு பெயர் இப்போது உண்டா?”

“பெயர் உண்டு”

“ஊர் இருக்கிறதா?”

“ஊர் உண்டு”

“நாட்டில் உண்டா?”

“நாடும் உண்டு”

“இப்போது நீ இருக்கிறாயா?”

“நானும் உண்டு”

“நீ ஏன் தியானம் செய்யும் போது என் எல்லா கேள்விகளுக்கும் இல்லை என்றும் உணவு உண்ணும் போது உண்டு என்றும் பதில் சொன்னாய் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?” என்று குரு கேட்க இளைஞன் புன்முறுவல் பூத்தான்.

“தியானத்தில் இருக்கும் போது உடல் பற்றிய சிந்தனை இல்லை. அதனால் உங்கள் எல்லா கேள்விகளுக்கும் இல்லை என்று பதில் சொன்னேன். பசியுடன் உணவு உண்ணும் போது உடல் பற்றிய உணர்வு இருந்ததால் உங்கள் கேள்விகளுக்கு உண்டு என்று பதில் சொன்னேன்.”

இளைஞனின் பதில் கேட்ட குரு சொன்னார், “உன் பதிலில் உண்மை இருக்கிறது. நாளை முதல் நீ தொடர்ந்து பயிற்சிக்கு வரலாம். ஆனால் ஜென் பயிற்சி முழுமை அடையும் போது உண்ணும் போதும் உணவு பற்றிய கவனம் தான் இருக்கும். அப்போதும் உன்னைப் பற்றி சிந்தனை இருக்காது. நன்றி, நாளை வா” என்றார்.

சீடன் வானத்தைப் பார்த்தான். சிறு மழைத்தூறல் அங்கே ஆரம்பித்து இருந்தது.

- தேவதைகளின் விலாசம்
தேடினேன் கிடைத்து
மருத்துவ மனையில்

- பட படத்தது பட்டாம் பூச்சி
மெல்ல பிடிக்கப் போனேன்
மலர்ந்தது கண்ணிமைகள்

- மூடிய கதவுக்குள்
வாடியது பூஞ்சிட்டு
பள்ளிக் கூடங்கள்

- புல்லின் மடியில் பனித்துளி
பூவின் மடியில் தேன்துளி
சுகமான சுமைகள்

- த.ஆ.தாசன்

பட்டுப்போன மரக்கிளைகள்
உயிர்ப்புடன் இருக்கின்றன
பறவையின் கூடுகள்

- கா.ந.கல்யாணசுந்தரம்

1
தெளிந்த ஓடையில்
ஆழத்தில் தொடர்கின்றது
நகரும் படகின் நிழல்

2
மண்டியிட்டு மேயும் ஆடு
தலை குனிந்து கொள்கின்றது
ஆவாரம் பூ

3
பறக்கும் விமானம்
பார்க்கும் சிறுவனின் கையில்
ஒரு பறவையின் சிறகு

4
மழையில் நனைந்த
பற்றுக் கொடியில் வரிசையாய்
சூரியன்கள்

5
பூ உதிர்ந்ததும்
தாங்கிக் கொள்கின்றது’
பழுத்தயிலை



- ஷர்ஜிலா யாகூப்

1
எது மரம்? எது மனிதன்?
புதிராக்கி விடுகிறது
சுடுகாட்டு சாம்பல

2
கடந்து போன புயல்
அழகாக இல்லை
கூரையாகிப்போன வானம்...

3
அம்மா பசியால்
வாடும் போதெல்லாம்
தலை கவிழ்ந்திருக்கும் பானை

4
வசப்படும் இலக்கு
எளிதானதல்ல
தடை தாண்டும் பயணங்கள்...

5
தீபங்களின் ஒளியில்
மறைந்திருக்கிறது
மெழுகுவர்த்தியின் தியாகம்

- ஐ.தர்மசிங்

1

வெறித்து பார்க்கும்
சிறுவனின் கண்ணில்
பூட்டிய சத்துணவு கூடம்

2

அலங்கார விளக்குகள்
அணைத்து விடுவோம்
அதோ முழு நிலவு

3

உறக்கத்தை தடுக்கும்
பசியை விரட்டுகிறார்
விழித்திருக்கும் யாசகர்

5

என்ன கோபமோ
ஒவ்வொன்றாய் உதறுகிறது
இலைகளை மரம்

தட்சணாமூர்த்தி

1
வளைந்த புல்லில்
வண்ணத்துப்பூச்சி அமர
விடைபெறுகிறது பனித்துளி

2
மகள் இறங்கி விட்டாள்
அதிர்வுடன் ஆடி முடிக்கிறது
வெற்று ஊஞ்சல்

3
சாலையின் சிறு இடைவெளி
வண்ணமாக்கிச் செல்கிறது
கடைசி வெயில்

4
கிராமம் தாண்டி
சுமந்து வருகிறாள் தண்ணீர்
உச்சியில் கோடை சூரியன்

5
புதிதாய் பிறந்த குழந்தை
மடியில் உறங்குகிறாள்
கடவுளின் சிரிப்புடன்

- நல முத்துகருப்பசாமி

ஜப்பானிய மண்ணில் கவிச்சுடர்
கா.ந.கல்யாணசுந்தரம் அவர்களின்
தமிழ் ஹைக்கூ கவிதைகள் ஜப்பானிய
மொழியில் அங்கீகாரம் பெற்றது.

அகீதா பன்னாட்டு ஹைக்கூ அமைப்பின் தலைமை நிர்வாகி ஹைடெரோனி ஹிருதா அவர்கள் இரண்டாவது முறையாக கவிஞரின் ஹைக்கூ கவிதைகளை ஜப்பானிய மொழியில் மொழிபெயர்த்து உலக ஹைக்கூ வரிசையில் வெளியிட்டுள்ளது. கவிஞருக்கு வாழ்த்துகள்.

World Haiku Series 2020 (48) Haiku
by Kaa.Na.Kalyanasundaram

Hiruta Haiku, World Haiku Series 2021/05/31

akitahaiku.com

●

தானியம் தூவும்
வேடனின் கைகள்
வலை விரிக்கும்

the same hands
that sprinkles grains
would spread the net

同じ手
穀物をまく
ネットを広げる

●

ஆற்றில் மூழ்கியபடி
அடையாளத்தை இழக்கிறது
உடைந்த பாலம்

It sinks in the river
losing its identity
the broken bridge

川に沈む
アイデンティティを失う
壊れた橋

இலையுதிர்த்தபோதும்
அசையாத நம்பிக்கையில்
ஆணி வேர்

despite shedding leaves
it remains in unshakable hope
Tap-root

葉を落としても
揺るぎない希望のまま
主根

இலைகளை உதிர்த்தபடி
குளக்கரை மரம்
நீரில் தத்தளிக்கும் எறும்பு

the tree of pond
by shedding leaves
stranded ant in water

池の木
葉を落とすことによって
水中に取り残されたアリ

கா. ந. கல்யாணசுந்தரம்

பிஞ்சுக் கரங்களின்
தொடுதலின்றி வாடுகின்றன
உடைந்த பொம்மைகள்

they suffer a lot
without touch of tender hands
the broken dolls

とても苦しんでいる
優しい手に触れずに
壊れた人形

ஏணிப்படிகளோடு
உறவாடி மகிழ்கின்றன
உயர்ந்த எண்ணங்கள்

with the ladder steps
they please intimating with relations
great thoughts

はしご段で
関係が親密になる
素晴らしい考え

விழி மூடிய புத்தனின் தியானத்தில்
நடனமிடுகிறது
உதிர்ந்த சருகு

a dry leaf dances
in the meditation of
buddha with closed eyes.

枯れ葉が舞う
瞑想に
目を閉じた仏陀の。

குடிசையின் மேல் ஏறி
காய்த்துவிட்டுத் திரும்புகிறது
சுரைக் கொடி

ascending on a hut
It returns on bearing unripe
Calabash

小屋に登る
背負って戻る
未熟なひょうたんを

கா. ந. கல்யாணசுந்தரம்

தெருவில் மழை வெள்ளம்
அணை போடும் சிறுவர்கள்
ஒதுங்கி நடக்கும் கால்நடைகள்

flash flood in the street
bund building boys
deviating cattle

通りの鉄砲水
堤防を築いている少年たち
牛を逸脱させる

காற்று எதிர்த்தாலும்/
சுழன்றபடி முன்னேறுகிறது /
ஓலைக் காற்றாடி

despite wind’s resistance
It moves forward rotating
palm leaf hand fan.

風の抵抗にもかかわらず
回転しながら前進する
椰子の葉の手扇子。

லிமரைக்கூ

●

குஞ்சுகளுக்கு ஊட்டும் பறவை
காட்டுகிறது உயிர்களிடம் உள்ள
தாய்ப்பாச உறவை.

●

அசை போடுகிறது மென்று
பசு பால் கறக்கையில் நிற்கிறது
பக்கத்தில் வைக்கோல் கன்று.

- பொம்மிடி மோகன்தாஸ்

●

எங்கும் ஊரடங்கு
இருந்தாலும் நிரம்பி வழிகிறது
சவக்கிடங்கு

●

பனிப் பாறைகள்
உடைந்து நொறுங்கிட உயர்கிறது
கடல் மட்டம்

- க.குணசேகரன்

- சிவகாமசுந்தரி நாகமணி
சென்னை

அந்தக் காலத்தில் எங்கள் ஊரில் கோலாட்ட ஜோத்திரை என்று ஒரு மழை வேண்டும் விழா மிகச் சிறப்பாக நடக்கும். தினமும் காலை மாலை சிறுமியர் கோலடித்து பசுக்கடவுளை வணங்குவர். கோலடிக்கச் செல்லும் போது அம்மாவும், அத்தைகளும் எனக்குப் போட்டி போட்டுக்கொண்டு அலங்கரித்து அனுப்புவர். என் தம்பியும் சிலசமயம் பெண் வேடமிட்டு என்னுடன் கோலாட வருவான்.சித்தப்பா எங்கள் இருவரையும் புகைப்படம் எடுக்க முத்து ஸ்டுடியோவுக்கு அழைத்துச் செல்வார். போகும் வழியில் ஊரே எங்களை இரசிக்கும்.குடும்பப் புகைப்படம் எடுக்க வேண்டுமென்றால் சித்தப்பாவின் நண்பர் ஒருவர் காமிரா மாலை போட்டுக்கொண்டு வீட்டுக்கு வந்து எடுத்து விட்டுப் போவார். அவர் வரும் முன்பே சிறியவர் பெரியவர் எல்லோரும் தயாராகி நிற்போம். போர்வையைப் பின்னணித் திரையாக்கி முன்பு எல்லோரும் அமர ,குடும்பப்படம் எடுக்கப்படும். உடனே புகைப்படம் கிடைக்காது. சிறுவர்கள் நாங்கள் அவர் பின்னாடியே போய் புகைப்படத்தைப் பற்றிக் கேட்போம். கழுவக் கொடுத்திருக்கிறேன் காயப் போட்டிருக்கிறேன் எனத் துணியைத் துவைப்பதைப் பற்றிப் பேசுவது போல்

சொல்வார் சித்தப்பா நண்பர். ஒருவாரம் பத்து நாள் கழித்துக் கிடைக்கும் கருப்பு வெள்ளைப் புகைப்படத்தை அவ்வளவு ஆசையாகப் பார்ப்போம். இன்று அலை பேசியிலும், காமிராவிலும் நினைத்தபோது படம் வண்ண மயமாக எடுத்து உடனே பார்த்து இரசித்தாலும் அந்த மகிழ்ச்சி கிடைப்பதில்லை.

கருப்பு வெள்ளைப்படம்
வண்ண மயமாக இருக்கிறது
பழைய நினைவு

- இறந்த கரப்பான் பூச்சி
  மெல்ல நகர்த்திச் செல்லும்
  புற்று வரை எறும்புகள்

- மயானம் வரை
  தொடர்ந்து வருகிறது
  பாடையுடன் பறையும்.

- சற்று நேரத்திற்கு முன்
  பெய்த மழைக்குச் சாட்சியாக
  மலைக்கு அருகில் வானவில்

- ராஜிலா ரிஜ்வான்

- மலர் மைந்தன்

விடுதலை போராட்ட காலத்தில், கவிக்குயில் சரோஜினி நாயுடு உரையாற்றிடப் பொதுக்கூட்டம் ஒன்று ஏற்பாடாகி இருந்தது.அவர்,மேடை ஏறுவதற்கு முன்,மின் விளக்குகள் அனைத்தும் அணைந்து விட்டன.

கூட்டத்தில் ஒரே கூச்சலும், குழப்பமும் நிலவியது. என்ன செய்வதென்று தெரியாது,கூட்டத்தை ஏற்பாடு செய்தார்கள் தவித்தனர்.

துணிச்சலுடன் மேடை ஏறினார், நெஞ்சுருதி மிக்க சரோஜினி நாயுடு.

சிம்மக் குரலில், 'விளக்கு விளக்கு என்று கூச்சலிடுகிறீர்களே, விளக்கு இல்லை என்றால், மாற்று ஏற்பாடு குறித்து யோசிக்காமல் இருக்கிறீர்களே.... உங்களுக்காக நான் ஒரு விளக்கு கொண்டு வந்துள்ளேன்.அது, நம் அரசியல் ஆசான் மகாத்மா காந்திஜி தந்துள்ள அறிவு விளக்கு...' என்று பேச்சை துவக்கினார். அமைதியானது கூட்டம்

இருட்டில் தவித்தவர்களுக்கு
விளக்கு அளித்தார்
சரோஜினி நாயுடு.

- ராஜிலா ரிஜ்வான்

அப்பொழுதெல்லாம் விடுமுறை நாட்களில் நாங்கள் வீட்டிற்கே செல்லாமல் விளையாடிக் கொண்டிருப்போம் ...

நானும் என் சித்தி சித்தப்பா பசங்களும் வீட்டிலிருந்து காட்டுப்பள்ளி வரை நடந்தே செல்வோம்... அது கொஞ்சம் தூரம் தான்... ஆனால் அப்போதெல்லாம் அது எங்களுக்குத் தூரமாக தெரியாது ...

வழி நெடுக நிறைய புளிய மரங்கள் இருக்கும். அதில் இளம்பிஞ்சு காய்களாகப் பறித்து வந்து.. உப்பு மிளகாய் சேர்த்து அரைத்து சட்னி அல்லது வடகம் செய்வோம்... அதையெல்லாம் நினைக்கையில் இப்பொழுது கூட நாக்கில் எச்சில் ஊறுகிறது... வழியில் சில இடங்களில் மா மரங்களும் இருக்கும்... அதில் சில நேரங்களில் கல்லெறிந்தும்.. பல நேரங்களில் மரத்தின் மேலேயே ஏறியும் பழங்கள் பறித்த அனுபவமும் உண்டு...

சில நேரங்களில்...

கல்லடி பட்ட பழம்
குடுகுடுவென ஓடிச்சென்று
தோட்டக்காரன் முன்னால் விழும்.

- கொள்ளிடம் காமராஜ்

திருச்சிராப்பள்ளி

யான் புத்தாபுரம் எனும் கிராமத்தில் பதினைந்து வருடங்களுக்கும் மேலாகக் குடியிருந்தேன். கல்லணைச் சாலையில் அந்த ஊர் இன்றும் பெயரும் புகழுடன் திகழ்கின்றது.

குறிப்பாக ஐந்தாவது வரையில் யான் அங்குள்ள ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளியில் கல்வி பயின்ற அனுபவம் எனக்கு உண்டு.

ஒருமுறை எனது வகுப்பு நண்பனை அவன் வீட்டிற்கு நேரில் அழைக்க யான் சென்றிருந்த பொழுது அவர்களின் வீட்டு நாய் என்னைக் கடித்து விட்டது. இந்த விபரம் தெரிந்தவுடன் எங்க அப்பா என்னை உதை உதையென நையப்புடைத்து விட்டார். நாய் கடித்தது போதாதென்று எனது தந்தையிடம் யான் பட்ட ஏச்சு பேச்சையும் வாங்கிய அடி உதையையும் என்றென்றும் என் வாழ்நாளில் என்னால் மறக்க இயலாது..!

பால்ய சிநேகிதனையும்
வகுப்பாசிரியரையும் தெரியாது
வீட்டுச் செல்லப்பிராணிக்கு..!

* அசையாது
இருக்கும் பூந்தொட்டியில்
அசைகின்ற பூச்செடி

* இப்போதோ எப்போதோ
எல்லோர் வீட்டிலும் இருக்கிறது
மரணத்தை வென்ற ஒரு மறுபிறப்பு

* எங்கே விழுந்தது
யாருக்கும் தெரியவில்லை
மலையிலிருந்து உருட்டிவிட்ட கல்

- அருணாச்சல சிவா



● வாசல் கோலம்
வளமாக பூத்திருக்கினறன
விருந்தினர் முகம்.

- மூ.மணித்திருமுருகன்

●
தோட்டத்து வீடு
வேலிதாண்டி உள்ளே வந்திடும்
தூய்மையான காற்று...!

- செண்பக ஜெகதீசன்

- காட்டுக்குள் லாரி
  வெட்டிய மரங்கள்
  லாரிக்குள் காடு.

- துரை நந்தகுமார்

- தென்னை மரத்தை
  அரிவாளால் தட்டி பார்த்தேன்
  மரங்கொத்தியின் இசை

- புனிதன்

- கோடையில் மழை
  மகிழ்வைத் தருகிறது
  சிறுவர்களின் ஆட்டம்

- கலாராணி லோகநாதன்

- சூரியனின் வருகை
  இதமாக இருக்கிறது
  நாய் உறங்கிய இடம்

- காவத்தையூர் பழனியாண்டி

- பேருந்திற்குள் புகுந்து
  பயணிகளை தூங்கவைக்கிறது
  காற்று.

- எல்லா அலைகளையும்
  ஓய்வெடுக்க வைத்துவிடுகின்றது
  மருத்துவமனை

- சாமரம் வீசுகிறது
  உழைப்பாளர்கள் சிலைக்கு
  உப்புக்காற்று.

- வீரியமிக்க விதைகளென்று
  தரம் பிரிப்பதில்லை
  பறவைகள்.

- லோகசந்திர பிரபு

- நீடிக்கும் சமூக இடைவெளி/
  வயிறு ஒட்டிக்கிடக்கிறாள்/
  விலைமாது

- நேசன் மகதி

●

தியானத்தில் மூடிய கண்கள்
கடைசிவரை திறக்கப்படவே இல்லை
வழங்கப்பட்ட தானம்

●

அடுப்பில் வைத்த பாத்திரம்
திடீரென வெடித்துச் சிதறும்
சோளப் பொரி

●

பரபரப்பான நேரம்
அவசரமாக சாலையைக் கடக்கும்
உதிர்ந்த சருகுகள்

●

நடக்கும் அக்கிரமங்கள்
கண்டும் அசையாமல் இருக்கிறான்
அகிம்சையைப் போதித்தவன்

●

தூண்டிலிடும் தாத்தா
கடைசிவரை சிக்கவே இல்லை
மின்னும் விண்மீன்கள்

●

உயரமான கட்டடம்
மேலேறுவதும் இறங்குவதுமாய் இருக்கும்
வயோதிகரின் இரத்த அழுத்தம்

- வஃபீரா வஃபி

●

வண்டியில் வைக்கோல்
நிரம்பி இருக்கிறது
சோளக்காட்டு பொம்மையின் வயிறு.

●

தனிமை மணித்துளிகள்
ஒவ்வொன்றாய்க் கடக்கின்றன
புத்தகத்தின் பக்கங்கள்.

●

தாயின் கவனம்
சிதறாமல் இருக்கிறது
குஞ்சுக்கான இரை.

●

படித்து முடித்த பக்கம்
மெல்லப் புரட்டுகிறது
தென்றல் காற்று

- கமலக்கண்ணன்

● முதுகு சுமை போய்
மடியில் சுமை
இணைய தளக் கல்வி

- பொன்னி

●

வறுமையின் பிடியில்
நொறுங்கி விடுகிறது
விருப்பம்.

●

தனிமையான காலங்களில்
தலையணையை நனைக்கிறது
நினைவுகள்

- சரவி பி ரோசிச்சந்திரா

●

நாற்று நடுகையில்
உடனடி ஊடுபயிர்
உழவன் பாதச் சுவடுகள்

●

மணிக்கு ஒருமுறை
நாத்திகனுக்கும் கிட்டுகிறது
தேவாலய வசனம்

- பொன்னம்பலவாணன்

●
உடுத்தாத சேலைக்குள்
ஒளிந்து இருக்கிறது
அம்மாவின் தாலாட்டு ...!

●
குடையை வரைகிறேன்
எனக்குள் சொட்டுகிறது
வியர்வை மழை

- ஹிஷாலி

● காரணம் இல்லாமல்
குரைப்பதே இல்லை
தெருநாய்கள்

● சுத்தமான காற்றை
சுவாசிக்க வருகிறது
சுங்கவரி

● வேர்கள்
வளர்ந்து கொண்டே செல்கிறது
வெட்டிய மரத்தின் கீழ்

- கலை செல்வன்

- உள்ளேன் ஐயா’ சொல்ல
ஒரு மாணவனும் இல்லை
தொற்றுக் காலம்!



- அறைய ஒரே ஆணி
வரிசையாய்ப் பெட்டிகள்
கொரோனா

- குளித்தபடியே இருக்கின்றன
கரையேறவே இல்லை
மீன்கள்

- ஜன்னலை அழகாக்கிவிட்டு
நீ
எங்கு போய்விட்டாய்?

- நா.வே.அருள்

- தனிமையில் பறக்கிறது
ஒற்றை இறகு
அமைதி நடையில் பூனை

- கவி யுக கமல்

- இலை உதிர்ந்த மரம்
  வேர்களில் ஒளிந்திருக்கிறது
  சொட்டு ஈரம்.

- யாசகன் தட்டை
  நிரப்பிவிடுகிறது,
  அனுதாபம்.

- பழைய தடங்கள்
  ஞாபகப்படுத்துகின்றன
  புகைப்படங்கள்

- பறக்கும் பட்டம்
  உச்சம் தொடுகிறது
  குழந்தையின் குதூகலம்

- அய்ஷத்அப்சத்

- புல்லாங்குழல்/
  இசையும் திசையும்/
  அறிந்துகொண்ட மாடு

- குமரன் அம்பிகா

- வண்ணங்கள் மாறும் வானம்
  வியந்து நோக்க எங்கிருந்தோ ஒலிக்கிறது
  ஒற்றைக் குயிலின் கானம்

- துளிர்த்த விதை
  கொத்தித் தின்னும்
  கொண்டைச் சேவல்

- ஒளிரும் வெளிச்சத்தில்
  உயிர்ப்பைத் தேடிக் கிடக்கிறது
  அரவமில்லா நெடுஞ்சாலை!

- இலையுதிர் காலம்
  உரமாகப் போகும் மகிழ்வுடன்
  மரத்தின் இலைகள்

- அன்புச்செல்வி சுப்புராஜூ



- வீசும் காற்றில்
  நன்றாக உணர முடிகிறது
  தூரத்து மழை.

- காற்று சருகைப் புரட்டியதும்
  ஊர்ந்து செல்லும்
  மறைந்திருந்த பூரான்.

- துளிர்களோடு
  மலர்ந்து விடுகின்றன
  கொன்றைப் பூக்கள்

- சோளக்கொல்லை பொம்மை
  தலைகவிழ்ந்து பார்க்கிறது
  கூடுகட்டும் குருவியை..

- **ச.ப.சண்முகம்,** எழுவாம்பாடி

- பாட்டி போட்ட ஊறுகாயாய்
  ருசிக்குது நினைவலைகள்
  பிறந்த மண்ணின் வாசம்

- சடசடவென்று கொட்டிய மழை
  உலர்ந்த மனதின் உயிர்ப்பு
  நட்பின் அன்பு

- இடியாப்பச் சிக்கல்கள்
  இல்லாததா வாழ்வு
  இடித்துரைத்தார் தாத்தா

- முனைவர் ராஜி ஸ்ரீநிவாசன்

- அதோ வழிகாட்டிச் செல்லும்
  பசுவின் வால் நிறைய
  சில ஊமத்தங்காய்கள்...

- என் குடிசை வீட்டு முற்றத்தில்
  வருவதும் போவதுமாக..
  யாரோ வண்ணம் பூசிய பறவை

- ரசி குணா

- யார் அசைத்தது
  ஆடியபடி உள்ளதே
  வானம்

- அவ்வப்போது
  நிலவையும் அசைத்துவிடுகிறது
  தவளையின் பாய்ச்சல்

- அழிந்துவரும் காட்டினுள்
  அவ்வப்போது கேட்கும்
  விலங்குகளின் சத்தம்

- த.யாசகன்



- குழந்தைகள் சீண்டவில்லை
  கட்டிலில் கேட்பாரற்று கிடக்கும்
  மின்னூட்டமில்லா கைபேசி..

- புதுமைப் பெண்
  தலைநிமிராமல் நடக்கிறாள்
  கிராமத்து வீடு..

- சாரதா சந்தோஷ்
ஐதராபாத்

● வானத்தை வணங்கி
வனத்தை தேடுகிறது
வண்ணத்துப்பூச்சி

● மழைக்கால குளம்
தூண்டிலில் சிக்கியது
தவளையின் குரல்

● பாதை காட்டுமோ
கரையேறும் ஆமை முதுகில்
நிலவொளி

- சகு வரதன்

●
உயிரில்லாதவரின் அழுகுரல்
சத்தம் கேட்கின்றது
சருகுகளின் ஓசை.

- லக்ஷ்மி கார்த்திகேயன்

- உதவும் கரங்கள்
  அதிகரித்து இருக்கிறது
  மனிதநேயம்

- பசுமையான வயல்வெளி
  கண்களைக் கவர்கிறது
  குடிசை வீடு

- தள்ளாடும் முதுமை
  மீண்டும் வருகிறது
  மழலைப் பருவம்

- நழீம் ஹனீபா ஒலுவில்

-
உதட்டில் நேற்று கடித்தது
சாமத்திலும் வலிக்கிறது
எறும்பு..!

- மகிழை.சிவகார்த்தி

- மழை ஓய்ந்தது
புற்கள் சிலிர்த்து நின்றன
ஆட்டைக் கண்டு.

- அரிசி சேமிப்பு
சிறுவர்கள் பலர் தயாரித்தனர்
கூட்டாஞ்சோறு.

- மழை ஓய்ந்தது
சொட்டும் மழைத்துளிகளின்
இசைக்கச்சேரி.

- நாகி. ஆர். ராஜேந்திரன்

- உயிர் காக்கும் மருந்துகள்
எளிதாகக் கிடைக்கின்றன
கொள்ளை விலையில்

- வரிசையில் நிற்கிறது
ஒன்றன் பின் ஒன்றாய்
தகன மேடை நோக்கி

- இளவல் ஹரிஹரன்

- முகம் கழுவிக் கொள்ளும்
நதி நீரில்
காலைக் கருக்கல்

- மழைத்துளி தொட்டதும்
சிலிர்த்துக் கொள்ளும்
புதிதாய் பூத்த மலர்

- நிலவுக்கென்ன தாகம்
ஓடை நீரில் ஓயாமல்
அருந்துகிறதே

- வைகைபுத்திரன்

-
நதி ஓட்டத்தில்
மூழ்காமல் பயணிக்கிறது
காலம்!

- க.சோமசுந்தரி.

- தும்பியின் வானம்,
வசப்படாமலேயே
முடிந்தது தூரம்!!

- மோதிக் கொண்ட ஆடுகள்,
பெரும் வலி
ஆட்டுக்காரனுக்கு!!

- கோவில் யாசகனின் வினா,
அருகிலே கடவுள்,
தூரத்திலே கருணை!!

- மு.இரா.சாமியப்பன்

- கருப்பு சக்கரங்கள்
காற்று நிரப்ப தேவையில்லை
சிறுமியின் நுங்குவண்டி.

- மணவை கார்னிகன்

- பிறந்த உடனே
இறந்து போகின்றன
நொடிகள்.

- கவியோகி கருணாகரன்

● பசியாறி நகர்கின்றன
அமைதியான அணிவகுப்பு
பின்புறத்தில் வாத்துக்காரன்.

● மேய்ப்பவனின் உள்ளத்தை
தெளிவாய் உணர்த்தும்
வழிபிசகாத வாத்துகள்

● காற்றின் வேகத்தால்
கலங்கும் குஞ்சுகள்
போர்த்துகிறது காக்கை

- ஜெயச்சந்திரன் கோலப்பன்

●

**கையில் கோடாரி
விறகுவெட்டி தேடியலைகின்றான்
இளைப்பாற நிழல்**

- சபா பெரம்பலூர்

● நல்ல காற்று ஆரம்பம்
முடிய இருக்கிறது
மாநகர எல்லை

- ப.விஜி

- பால் காய்ச்ச
  மெல்ல எட்டிப்பார்க்கிறது
  பூனை.

- இராஜா. ரமேஷ்

- சிலந்தி வலையில்
  சிக்கி இருக்கு
  ஐயனாரின் அரிவாள்..

- மகிழ்நிலாவின் தந்தை

- இயற்கை சார்ந்த பயணம்,
  மனதிற்கு இதமளிக்கின்றது,
  மழை நனைத்த சாலை,

- மு.நஜீர் அகமது

- வருடும் விழிகள்
  அமாவாசை இரவிலும் விளக்குகள்
  மின்மினி பூச்சிகள்..

- தி. ஆனந்த்

முத்தமிடும் காற்றுக்கு
மலர்கள் திரும்பிக் கொடுக்கின்றன,
வாசனையை!

புதைத்த மிதிவெடிகள்
தோண்டியதும் வெளிவந்தன,
மனித எலும்புக் கூடுகள்!

வரைந்த மீனையும்
திருடப் பார்க்கிறது,
அமைச்சரின் வளர்ப்புப் பூனை!

சிறுமி உட்கார்ந்ததும்
ஓய்வெடுத்துக் கொள்ளும்,
சேர்ந்து நடந்த நிலவு!

சுமையாக இருக்கிறது,
நிகழ்காலத்தை தூக்கிக்கொண்டு
நடக்கின்றேன்

- அன்ஸார் எம்.எல்.எம்.

என்றென்றும் நினைவில்
மலரஞ்சலி !

ஹைக்கூ மற்றும் தன்முனைக் கவிதைகளில்
சிறந்த விளங்கிய கவிஞர்கள் செல்லம் ரகு,
சுகுமாரன் கந்தையா, மல்லிகை தாசன்,
மகேந்திரன் நீதி ஆகியோரின் மறைவு தமிழ்
இலக்கிய உலகிற்கு பேரிழப்பு.
ஆழ்ந்த அஞ்சலிகள்.

தமிழ்நெஞ்சம்

&

உலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம்

இணைந்து வழங்கும் "ஹைக்கூ திண்ணை"